ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தரப்பாக்கம் ஊராட்சி தி.மு.க சார்பில் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தேமாதரம் ஏற்பாட்டிலும் ஊராட்சி மன்றத் தலைவர் எஸ்.பாண்டியன் தலைமையிலும் நடைபெற்ற திராவிட பொங்கல் விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கோலப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் 1,000 பொதுமக்களுக்கு பொங்கல் பரிசை வழங்கினார்.

இமாம் அஹ்மத் ரசா அசோசியேசன் வா தாருல் உலாம் இமாம் அஹ்மத் ரசா 2026 குர்ஆன் முடிப்பு பட்டமளிப்பு விழா சேப்பாக்கத்தில் உள்ள செல்வம் மகாலில் நடைபெற்ற விழாவில் தலைமை வகித்த மௌலவி கவுஸ் மதனி டாக்டர் குலாம் ஹைதர் ராஸ்வி, பொருளாளர் மற்றும் அன்சார் பாஷா ராஸ்வி ஏற்பாட்டில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் குர்ஆன் முடித்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி சிறப்பித்த சிறப்பு விருந்தினரான கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில செயலாளர் சிறுபான்மை நல உரிமை பிரிவு துணை தலைவர் இறையன்பன் குத்துஸ், சென்னை மேற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் எஸ். எச். ரஹ்மத்துல்லா ஆகியோர் சான்றிதழ் வழங்கினர். உடன் தர்வேஸ் பிரோஸ் மோய்தின் மற்றும் நிகழ்ச்சியில் இமாம்கள் உலாமாக்கள் உள்ளனர்.

மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! ஜெ.ராமகிருஷ்ணன் முன்னிலை!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட மாணவர் அணி ஒன்றிய - மாநகர - நகர - பேரூர் - பகுதி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் மு.குணசேகரன் அறிவிப்பு!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட மாணவர் அணி ஒன்றிய, மாநகர, நகர, பேரூர், பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் (22.01.2026 - வியாழக்கிழமை) மாலை 4 மணி அளவில், காஞ்சிபுரம் மாவட்ட கழக அலுவலகம், பவளவிழா மாளிகையில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., தலைமையிலும் மாநில மாணவர் அணி துணைச் செயலாளரும், மாணவரணி மண்டலப் பொறுப்பாளருமான ஜெ.ராமகிருஷ்ணன் மற்றும் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் டி.ராம்பிரசாத், ஏ.வி.சுரேஷ்குமார், தமிழ்ச்செல்வன், சரளா தனசேகரன், எஸ்.சரண்ராஜ் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

அதுபோது ஜனவரி 25 அன்று காஞ்சிபுரத்தில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் மற்றும் கழகத் தலைவர் பிறந்தநாள் விழா குறித்து ஆலோசிக்கப்பட இருக்கிறது.

எனவே இந்த கூட்டத்தில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, மாநகர, நகர, பேரூர், பகுதி மாணவர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மு.குணசேகரன்
அமைப்பாளர்,
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி

திராவிட இயல் ஆய்வாளர்

பேராசிரியர் க.நெடுஞ்செழியன் துணைவியார் பேராசிரியர் சக்குபாய் மறைவு!

திருச்சி அன்பில் படுகையில் நல்லடக்கம்!

திருச்சி, ஜன. 20 - தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் பேராசிரியரும் செம்மொழித் தமிழாய்வு விருது பெற்றவரும் திராவிட இயல் ஆய்வாளராகத் திகழ்ந்தவரும் பெரியார் பேருரையாளராக விளங்கியவரும் ஆன பேராசிரியர் முனைவர் க.நெடுஞ்செழியன் துணைவியார் பேராசிரியர் முனைவர் சக்குபாய் அவர்கள் 18.01.2026 ஞாயிறு இரவு தமது இல்லத்தில் மறைவுற்றார். சில மாதங்கள் உடல் நலமின்றி மருத்துவக் கண்காணிப்பில் இருந்துவந்தார்.

இவர் அரசுக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக 30 ஆண்டுகளுக்குமேல் பணியாற்றியவர். கணவரைப் போலவே தீவிரத் திராவிட இயக்க ஆய்வாளர். கணவரோடு இணைந்து பெரியார் கொள்கைகளைப் பரப்பும் அரும்பணியில் ஈடுபட்டுப் பெரியார் பேருரையாளர் ஆக விளங்கியவர். அரிய ஆய்வு நூல்கள் பல எழுதியவர்! ஏற்கெனவே பேராசிரியர் நெடுஞ்செழியன் மறைந்தது திராவிட ஆய்வுக்குப் பேரிழப்பாகும். நேற்றுப் பிற்பகல் திருச்சி அன்பில் படுகையில் இவர் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த இணையருக்கு நகைமுத்து, குறிஞ்சி என இரண்டு மகள்கள் உள்ளனர்.

தி.மு.கழகத் தோழர்களும் திராவிடர் கழகத்தினரும் மறுமலர்ச்சி தி.மு.க. வினரும், தமிழ்த் தேசிய அமைப்பினரும் இறுதி வணக்கம் செய்தனர்.

நெடுஞ்செழியன் இளவல் பூ.துரையரசன் இறுதி ஏற்பாடுகளைக் கவனித்தார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வருகை:

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு அறிக்கை!

சென்னை, ஜன. 20 - திருவொற்றியூர் கிழக்குப் பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அவர்களின் அறிவுறுத்தலின் படி, திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் - 1வது மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் பகுதி அவைத்தலைவர் ஆர். சி.ஆசைதம்பி தலைமையில் இன்று (20.01.2026 - செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணிக்கு திருவொற்றியூர் சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

ஆகையால் பகுதி கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள் , மாவட்டப் பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட பகுதி அணியின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொள்ளும் படி அன்புடன் கேட்டுகொள்கிறேன்.

பொருள் :

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஜனவரி 25 வீரவணக்க நாள் பொதுக் கூட்டம் சிறப்புரையாற்ற வருகை குறித்தும், SIR பணிகள், கழக ஆக்கப் பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவா தி.மு.தனியரசு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மதுரவாயல் வடக்கு பகுதி, 146 வது வட்டம்,தனலட்சுமி நகரில், வட்ட கழக செயலாளர் மதுரவாயல் எம். ரூபன், ஏற்பாட்டில் திராவிட பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மண்டலகுழு தலைவர், பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் கலந்து கொண்டு விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்கள், மற்றும் மகளிருக்கு பரிசு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தீ.பாலாஜி, பி. சங்கர், பி.வாசு, எம்.பிரகாஷ், ஓ.கோபி, வி.டி.பாபு, என்.சந்திரன், ஆர்.மணிகண்டன், ஜெ. ஹேமசந்திரன், எஸ்.போஸ், ஆர்.சுப்புராயலு, எம்.செல்வம், எஸ்.சிதம்பரம், வி.சண்முகம், எஸ். ஆறுமுகம், பி.வேலாயுதம் மற்றும் மகளிர் பங்கேற்றனர்.

புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

மாதவரம் வடக்குப் பகுதி தி.மு.க. சார்பில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

மாநில அளவிலான மாபெரும் மாட்டு வண்டி ரேக்ளா போட்டி!

சென்னை, ஜன.20- சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் கழக இளைஞரணி செயலாளர்,துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் மாட்டு வண்டி ரேக்ளாப்போட்டி நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் கழக இளைஞரணி செயலாளர்,துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாநில அளவிலான மாபெரும் ரேக்ளா ரேஸ் போட்டி 17 வது வட்டம் தீயம்பாக்கம் காந்தி நகரில் நடைபெற்றது.

ஆறு பிரிவுகளாக நடைபெற்ற இப் போட்டிகளில் ஒற்றைப்பல் சிறியமாடு, ஒற்றைப்பல் பெரிய மாடு, இரண்டு பல் சிறிய மாடு, இரண்டு பல் பெரிய மாடு என்று ஆறு பிரிவுகளாக நடைபெற்ற போட்டிகளில், சுமார் 80க்கும் மேற்பட்ட மாடுகளும் மாட்டு வண்டிகளும் அதன் உரிமையாளர்களும் கலந்து கொண்டார்கள்.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கிருஷ்ணகிரி, மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் இருந்து கலந்து கொண்ட மாடுகளும் அதன் உரிமையாளர்களும் இப் போட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கலந்து கொண்ட அனைத்து வீரர்களுக்கும் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் சீருடைகள் மற்றும் 500 பேருக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

தீயபாக்கம், காந்திநகர், சென்றம்பாக்கம், பெரியார் நகர், ஸ்பிக் கம்பெனி சிக்னல், அரியலூர் எடை மேடை வரை நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் நான்கு இடங்களை பிடித்த மாடுகளுக்கும் அதன் உரிமையாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

முன்னதாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கேக் வெட்டப்பட்டு கொண்டாடப்பட்டது. செங்குன்றம் காவல் நிலைய ஆய்வாளர் விஜயகுமார் கொடி அசைத்து முதல் போட்டியை துவக்கி வைத்தார்.

17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் வரவேற்றார்,வட்ட நிர்வாகிகள் சி. மூர்த்தி, சி. பாலாஜி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

16 வது வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன், 19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன், 23 அ வட்டச் செயலாளர் வி.ஆர். குப்பன், சென்றம்பாக்கம் ஊராட்சி தலைவர் என். ராமு ஆகியோர் முறையே இரண்டு, மூன்று,நான்கு ஆகிய போட்டிகளை துவக்கி வைத்தனர்

இந்த போட்டியை மகேஷ், செட்டிமேடு கோபால், எம்.விஜய், எம். விக்கி ஆகியோர் ஒருங்கிணைத்திருந்தனர்.

மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முக பிரியன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் எச்.பீர் முகமது, எஸ் முத்துவேல், பகுதி மகளிர் அணி நிர்வாகிகள் சுகாசினி, அத்திக்குளம் தேவி, சகிலா, ராஜேஸ்வரி மணலி புதுநகர் சி.எம் .ராஜா, 17வது வட்ட இளைஞரணி அமைப்பாளர் வக்கீல் எம்.என் தளபதி,பாக முகவர்கள் டி. திவாகர், எம். மைக்கேல், வி .சுமிர், ஜி. கார்த்திக், இ. சுதர்சன், ஜி. பூபாலன்,எஸ். ஜோசப், ஏ. ஜி. கதிரவன், ரூப்குமார், மகாலட்சுமி, எம். மைக்கேல், பி. செந்தில், இ. கார்த்திக், ஜி. முனிவேல், செம்பரம்பாக்கம் கிளைச் செயலாளர் ஜி. மேகநாதன், ஜெயபால் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

செங்குன்றம், மாதவரம் பால் பண்ணை, மணலி ஆகிய காவல் நிலையங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

நிகழ்ச்சியின் முடிவில் மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன் நன்றி கூறினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் தமிழ்நாடு துணை முதலமைச்சர்,கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாநில அளவிலான மாபெரும் ரேக்ளா போட்டி 17 வது வட்டம் தீயம்பாக்கத்தில் நடைபெற்றது. இப் போட்டியில் கலந்து கொண்ட 80 மாட்டு வண்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு கோப்பைகளும் ரொக்கமும் வழங்கப்பட்டன. 17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் வரவேற்க, இ. கண்ணப்பன், மாத்தூர் கா. தாமரைச்செல்வன், வி.ஆர். குப்பன், ஆர் பாபு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

தாம்பரம் மாநகராட்சி மண்டலம்.4 உட்பட்ட 49,வது வார்டு ஜாகிர்உசேன் தெருவில் திராவிட சமத்துவ பொங்கல் விழாவை முன்னிட்டு இ.நவீன் ஏற்பாட்டில் பல்வேறு விதமான போட்டிகள் நடைபெற்றது. இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் 4,வது மண்டல குழு தலைவர் பெருங்களத்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் பரிசுகளை வழங்கினார். உடன் மாநகர, பகுதி, வட்ட நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பகுதி பொதுமக்கள் மகளிர் என பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கோட்டூர் ஐப்பார்
சனவரி 20 (2020)



தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டப் பிரதிநிதியாகவும், கோட்டூர் ஒன்றியப் பொறுப்பாளராகவும், நாகை தெற்கு மாவட்ட சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

ஊராட்சி மன்றத் தலைவராகவும், புத்தகரம் கூட்டுறவு சங்க தலைவராகவும் பதவி வகித்தவர்.

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் மற்றும் தலைமை அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.